**போரதீவுப்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

-------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்

--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

--------------------------------------

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 22 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 01 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

----------------

போரதீவுப்பற்று பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2 நிதி மீளாய்வு

----------------

2.1 நிதி விளைவுகள்

--------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான செலவிலும் கூடிய வருமானம் ரூபா 2,565,666 ஆக இருந்ததுடன் எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா1,013,784 ஆக இருந்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,579,450 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

-------------------------------

2.2.1 வீதவரிகள்

------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2015 ஆம் ஆண்டிற்கான காலப்பகுதியில் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்

------------------------------

சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 501,868 கடன் மீதிகள் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை அவர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளிகளிடமிருந்து அறவிட 2016 மே 06 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்